செ.வெ.எண்:70 நாள்:30.01.2020

# அரியலூர் மாவட்டம்

# வேளாண் திருவிழாவில் கனிகள் மற்றும் காய்கறிகள், சத்துக்கள், மருத்துவ குணங்கள் மற்றும் மதிப்பூட்டல் கையேட்டினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வெளியிட்டார்கள்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், சோழமாதேவி கிராமத்தில் கிரீடு வேளாண் அறிவியல் மையம், வேளாண்த்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை இணைந்து நடத்தும் வேளாண் திருவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், கனிகள் மற்றும் காய்கறிகள், சத்துக்கள், மருத்துவ குணங்கள் மற்றும் மதிப்பூட்டல் கையேட்டினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இவ்விழாவில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு புரட்சித்தலைவி நமது அம்மா அவர்களின் ஆசிர்வாதத்தில் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. நமது மத்திய மற்றும் மாநில அரசு விவசாயிகளின் செழிப்பிற்காக அரும்பாடுபடுகிறது. இத்தகைய ஆட்சி காலம் விவசாயிகளின் பொற்காலம் ஆகும்.

அம்மாவின் கனவு விளைச்சலை இருமடங்காக்கி வருமானத்தை மும்மடங்காக்குவதாகும். இதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான திட்டங்களை அமைத்துள்ளது. நமது அரியலூர் மாவட்டத்தில் பின்தங்கிய மாவட்டம் என்று கருதப்படும் நிலையில் விவசாயிகள் அரசு திட்டத்தை பயன்படுத்தி புதிய தொழில்நுட்பங்களை கையாண்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக அதிக வருமானம் தரக்கூடிய காய்கள் மற்றும் பழங்களை சாகுபடி செய்ய வேண்டும். இந்தியாவிலேயே தமிழ்நாடு பழ உற்பத்தியில் ஆறாவது இடமும், காய்கறி உற்பததியில் நான்காம் இடமும்,பெற்றுள்ளது. ஆனால் இதில் அரியலூர் மாவட்டத்தின் பங்கு குறைவாகும். நமது மாநிலத்தின் விவசாயம் தொடர்பான சிறப்பாக செயல்பாட்டிற்காக 2018-19ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அரசு விருது வழங்கியுள்ளது.

நமது மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்காக தமிழக அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கி வருகிறது. இன்று நடைபெறும் காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி தொழில்நுட்பட வேளாண் திருவிழா நமது மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான ஒன்றாகும். ஏனெனில் காய்கறிகள் மற்றும் பழங்களில் தான் அதிகமான ஆற்றல், உயிர்ச்சத்துக்கள், தாது உப்புக்கள் உள்ளன. தற்போது உள்ள காலக்கட்டத்தில் மனிதர்களுக்கு புதிய புதிய நோய்கள் வந்து கொண்டிருப்பது நாம் அறிந்தது. அதற்கு காரணம் நமது உணவு பழக்க வழக்கங்கள். நாம் போதிய அளவு பழங்கள் மற்றும் காய்கறிகளை எடுத்துக் கொள்ளாததே ஆகும். மேலும் நமது மாவட்டத்தில் பிரதான பயிரான நெல், கரும்பு, மக்காசோளம், நிலக்கடலை, பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் பழங்கள், காய்கறிகள் சாகுபடி குறைவாகவே உள்ளது. எனவே, காய்கறிகள் மற்றும் பழங்களின் சாகுபடி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பயிர் செய்து நமது மாவட்டத்தின் வளத்தை மேம்படுத்த வேண்டும். விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், முதுநிலை விஞ்ஞானி (வேளாண் அறிவியல் மையம்) முனைவர்.ஜி.அழகுகண்ணன், கீரிடு வேளாண் அறிவியல் மையத்தலைவர் முனைவர்.என்.நடனசபாபதி, ஒன்றியக்குழு பெருந்தலைவர் வீ.மகாலெட்சுமி, ஊராட்சிக்குழு துணைத்தலைவர் சே.அசோகன், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் வீ.இராஜேந்திரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் மு.கண்ணன், ஊராட்சி மன்றத்தலைவர் டி.ஜெயலெட்சுமி, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) வீ.கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) பி.அன்புராஜன், தொழில்நுட்ப வல்லுநர் ஏ.ராஜ்கலா மற்றும் விவசாயிகள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**